[1973 மார்ச் 31

பன்றி, நரி, முள்ளம் பன்றி, தேன் உண்ணும் கரடி முதலிய வன விலங்குகள் இங்கு சாதாரணமாகக் காணப்படுகின்றன. புலியைவிட சிறுத்தை இங்கு அடிக்கடி காணப்படக்கூடிய ஓர் வன விலங்கு. பூஞ்சசி சரகத்தில் உள்ள குன்றுப் பகுதிகள், பரந்த புல் வெளிகளும், சோலைக் காடுகளும் கொண்டவை. ஐபெக்ஸ் என்று கூறப்படும் நீலகிரி மலை ஆடு காணப்படும் ஒரு சில பகுதிகளில் இதுவும் ஒன்று. உடுமலைப்பேட்டைச் சரகந்தைச் சேர்ந்த மஞ்சம்பட்டி பள்ளத் தாக்கில், வெள்ளை நிறக் காட்டெருமைகள் உள்ளன.

இப்பகுதியில் மனித நடமாட்டம் அதிகமில்லாததால், உய்விடம் ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலை இங்கு உள்ளது. ஆனைமலை உய்விட எல்லைக்குள் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அவ்வாறு வசிக்கும் ஒரு சிலரும் மலைவாழ் பழங்குடியினர் தான். மேலும், இவ்வுய்விடத்தின் மேற்கு எல்லையை ஒட்டிக் கேரள அரசால் "உய்விடம்" என அறிவிக்கப்பட்டிருக்கும் தேக்கடிக் காடுகள் உள்ளன. ஆனைமலை உய்விடம், வானவழிகளுடன் இணைக்கப்பட் டிருக்கும் கோவையிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கோவையிலிருந்து உய்விடத்தில் பல பகுதிகளுக்கும் எளிதில் செல்லத் தக்க வகையில் நல்ல சாலைகள் உள்ளன.

(இ) இந்த உய்விடத்தை நிறுவுவதற்கு, 1972–73-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவு செய்ய ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. 1973–74 ஆம் ஆண்டில் இந்த உய்விடத்தை மேம்படுத்த ரூபாய் 2 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

MR. CHAIRMAN : The notices of privilege motion will be taken up on Monday, since the concerned Minister is not here.

2. அறிவிப்புகள்

(1) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have to announce to the House that I
4–30 பி.ப. have received a message from the Deputy Speaker of the Legislative Assembly transmitting copies of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1973 (L.A. Bill (No. 39 of 1972), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.